சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 241/2023

| | |
|---|---|
| பெயர் | : செல்வராஜ்(வா.சா.4) |
| தகப்பனார் பெயர் | :இளையபெருமாள் |
| கணவர் பெயர் | : |
| வயது | :50 |
| கிராமம் | :அட்டப்பட்டி |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :மேலூர் பத்திர அலுவலகம் அருகில் பத்திர எழுத்தர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

08.01.2026

வா.சா.4 முதல் விசாரணை:

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. அழைப்பாணையின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியிடம் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணம் காட்டப்பட்டு அதை தான் தயாரித்து கொடுத்ததாக சாட்சி குறிப்பிடுகிறார். அன்றைய தினம் அழகு தேவி, சாந்தி ஆகிய இருவரும் பத்திர அலுவலகத்திற்கு வந்தார்கள். இருவருமே கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுக்கும்படி என்னிடம் கேட்டார்கள். என் முன்பாக கிரைய தொகையை கொடுக்கவில்லை, ஏற்கனவே கிரைய முன்தொகையை கொடுத்துவிட்டதாக இருவருமே சொன்னார்கள். இருவருக்கும் இடையே என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்று எனக்கு தெரியாது. பத்திரம் தயாரித்து கொடுக்கும்படி சொன்னார்கள், தயாரித்து கொடுத்தேன். எவ்வளவு கிரையம் பேசப்பட்டது என்பது எனக்கு தெரியாது. அவர் கூறியதை தயாரித்து கொடுத்தேன். அன்றைய தினம் சாட்சிகளாக கருப்பையா, திருப்பதி ஆகியோர்

கையெழுத்து செய்தார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தை தயாரித்தவர் என்ற இடத்தில் நான் தான் கையெழுத்து செய்துள்ளேன்.

(வழக்கறிஞர் நீதிமன்றத்தில் முன்னிலையாகததால் குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.01.08 19:05:46 +0530

Sub Judge

Melur